[1972 ஆகஸ்ட் 13

Another Medical College in the Madurai University Area

* 48 Q.—THIRU D. SANTOSHAM : Will the Hon. the Minister for Public Health be pleased to state—

(*a*) whether, in view of the recent reduction in the number of seats in the existing Medical Colleges, there is any proposal to start another Medical College in the Madurai University area; and

(*b*) whether there are any steps under contemplation to increase the quantum of health services available in the State?

மதுரைப் பல்கலைக் கழகப் பகுதியில் மற்றொரு மருத்துவக் கல்லூரி

திரு. டி. சந்தோஷம் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) தற்போதுள்ள மருத்துவக் கல்லூரிகளில் இடங்களின் எண்ணிக்கையை அண்மையில் குறைத்துள்ளதைக் கருத்திற் கொண்டு, மதுரைப் பல்கலைக் கழகப் பகுதியில் மற்றொரு மருத்துவக் கல்லூரியினை ஏற்படுத்துவதற்கான செயற்குறிப்பு ஏதாவது உள்ளதா?

(இ) இம்மாநிலத்தில் கிடைக்கும் சுகாதாரப் பணி வசதியை அதிகப்படுத்துவதற்கான ஏற்பாடுகள் எவையேனும் அரசின் கருத்தில் உள்ளனவா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : (அ) இல்லை.

(இ) மக்கள் நல்வாழ்வுப் பணியை விரிவுபடுத்த நிதி நிலைக்கேற்ப கீழ்க்கண்ட நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன—

(i) மருத்துவ மனைகள் இல்லாத இடங்களில் புதிய மருந்தகங்களும் மருத்துவ மனைகளும் திறப்பது;

(ii) மக்களின் அதிகரித்த தேவைகளுக்கேற்ப ஏற்கனவே உள்ள மருத்துவ மனைகளில் படுக்கைகளை அதிகரித்தல்;

(iii) ஊராட்சி ஒன்றியங்கள், நகராட்சிகள் போன்ற உள்ளாட்சி மன்றங்கள் நடத்தும் மருத்துவ மனைகளை ஏற்று அரசு மருத்துவமனைகளாக நடத்துதல்;

(iv) தேவையென்று கருதுமிடங்களில் தனியார் மருத்துவ மனைகளுக்கு மானியம் வழங்குதல்.

1972 ஆகஸ்ட் 18]

திரு. கே. எஸ். அப்துல் வகாப் : தலைவர் அவர்களே, ஐந்தாண்டுத் திட்டத்தில் புதிதாக மூன்று மருத்துவக் கல்லூரிகள் துவக்குவதாகக் கூறப்பட்டிருக்கிறது. எந்த ஊரிலே முதலாவதாகக் கல்லூரியைத் திறக்க இருக்கிறார்கள் என்பதற்கு ஏதாவது முடிவு எடுக்கப்பட்டிருக்கிறதா ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவர் அவர்களே, தமிழ் நாட்டில் ஐந்தாண்டுத் திட்டத்தில் அப்படிப்பட்ட ஒரு கருத்து இருப்பதாக எனக்குத் தெரியவில்லை.

திரு. எம். சங்கரலிங்கம் பிள்ளை : தலைவர் அவர்களே, தென் மாவட்டங்களில் இஸ்லாமிய கலாச்சாரக் கழகத்தின் சார்பில் ஒரு மருத்துவக் கல்லூரி ஆரம்பிப்பதற்காக வேண்டி 300 ஏக்கர் நிலம் திருநெல்வேலி மாவட்ட எல்லை ஓரத்தில் வாங்க மெடிக்கல் கவுன்சில் விண்ணப்பம் செய்திருப்பதாக அறிகிறேன். அது பற்றி ஏதாவது தகவல் உண்டா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவர் அவர்களே, மருத்துவக் கல்லூரி ஆரம்பிப்பது என்பது 10, 20 ஆண்டுகளாகக் கருதப்பட்டு வந்துள்ள நிலையில் அல்ல. வரவர அந்த மருத்துவக் கல்லூரியை நடத்துவதற்கு நிதி மட்டும் இருந்தால் போதாது. அதற்கு வேண்டிய நிலம் மட்டும் இருந்தால் போதாது. திறமை மிக்க ஆற்றல் படைத்த ஆசிரியர்களும், நல்ல பயிற்சிக்கான வசதிகளும், இன்னும் பல்வேறு வகை நோயாளிகள் கூட அதற்குத் தகுந்த அளவுக்குத் தேவைப்படும். இவைகள் எல்லாம் கலந்திருக்கிற அமைப்பு முறை இருந்தால், மருத்துவக் கல்லூரியின் தரம் உயருவதாக இருக்க முடியும். அப்படிப்பட்ட சூழ்நிலைகளைக் கருதித்தான் மருத்துவக் கல்லூரி தொடங்குவது பற்றி அரசு முடிவு எடுக்க வேண்டியிருக்கிறது.

திரு. சி. வி. ராஜகோபால் : தலைவர் அவர்களே, செங்கற்பட்டு மருத்துவக் கல்லூரியில் 50 மாணவர்கள் படிப்பதாகக் கூறு கிறார்கள். அந்தக் கல்லூரியில் மாணவர்கள் படிப்பதற்கு வேண்டிய 'பெசிலிட்டீஸ்' அதாவது வசதிகள் மிகக் குறைவாக இருப்பதாகவும் அந்த மருத்துவக் கல்லூரி சென்னைக்கு மாற்றப் பட்டால் வசதிகள் அதிகமாகுமென்றும் சொல்கிறார்கள். இப்போது செங்கற்பட்டு மருத்துவக் கல்லூரி ஆஸ்பத்திரிக்கு வெறும் "ஆக்சிடெண்டு" ஏற்பட்டால் மட்டும் போவதாகச் சொல்லு கிறார்கள்.

மாண்புமிகு சட்டமன்றத் தலைவர் : 'ஆக்சிடெண்டு' என்றால் என்ன?

திரு. சி. வி. ராஜகோபால் : தலைவர் அவர்களே, மோட்டார், பஸ் விபத்து ஒன்றுக்குத் தான் அந்த மருத்துவக் கல்லூரி பயன் படுத்தப்படுகிறது என்று கூறுகிறார்கள். ஆகவே அது சென்னைப் பக்கம் வந்துவிட்டால் பற்பல விதமான . . .

MR. CHAIRMAN : The question must be very short, Mr. Rajagopal. Don't give a lecture.

THIRU C. V. RAJAGOPAL : The Chingleput Medical College Hospital does not have much of facilities. If it is shifted to Madras, it can have more facilities to diagnose more people and all other things which are needed.

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவர் அவர்களே. செங்கற்பட்டு மருத்துவக் கல்லூரியில் வகைவகையான நோயாளிகளைக் கண்டு பயிற்சி பெற்றுக் கொள்வதற்கு வாய்ப்பு குறைவாக இருக்கிறது என்ற கருத்து பலமுறை அரசுக்குத் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. என்றாலும் தொடங்கப்பட்ட கல்லூரியை எப்படி இடம் மாற்றுவது என்பது பற்றி அரசு ஆலோசித்தாக வேண்டும்.

Labour Welfare Fund

* 49 *Q.*—THIRU M. ARUMUGASWAMI : Will the Hon. the Minister for Labour be pleased to state the Welfare Centres set up out of the Labour Welfare Fund created by the Government during 1969–70?

தொழிலாளர் நல நிதி

திரு. எம். ஆறுமுகசாமி : மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாவிற்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

அரசால் ஏற்படுத்தப்பட்ட தொழிலாளர் நல நிதி எந்த நலத் திட்டங்களுக்காக 1969–70-ல் வழங்கப்பட்டது?

மாண்புமிகு திரு. என். வி. நடராசன் : தொழிலாளர் நல நிதியை நிர்வகிக்கும் பொருட்டு, 1971-இல் அமைக்கப்பட்ட